பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 09 ஞாயிற்றுக்கிழமை 25.07.2021 கதிர் 128

# வெலிக்கடைப் படுகொலையின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு





**(இ.கலையமுதன்)**

1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தின் போது வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி மற்றும் தலைவர் தங்கத்துரை ஆகியோரின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவலகத்தில் ☞2

## மேலும் 149 பேர் சிக்கினார்கள்!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 149 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் ☞2

## ஆர்.இராஜமகேந்திரன் கொரோனாவால் சாவு!



சக்தி-சிரச-எம்.ரி.வி. ஊடக குழுமங்களின் உரிமையாளரும் கபிட்டல் மகாராஜா நிறுவனத்தின் கூட்டுப்பணிப்பாளருமான 'கிளி' இராஜமகேந்திரன் காலமானார்.

கொரோனாவைரஸ் தொற்றுக்கு உள்ளாகி பத்து நாள்களாக நவலோகா ☞2

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒரு வருடம் பிற்போட வாய்ப்பு

## சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அதிகாரம் உண்டு எனத் தெரிவிப்பு

**இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒரு வருட காலத்துக்கு ஒத்திவைக்க விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இதன்படி, அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி தேர்தலை நடத்தாமல், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிவரை அதனைப் பிற்போடுவதற்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**நாட்டில் மாகாண சபைத் தேர்தல் பல ஆண்டுகளாக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதிலும் தற்போது சிக்கல் எழுந்துள்ளது.** ☞2

## அல்லைப்பிட்டிக் கடற்பரப்பில் கைதான 4 பேரும் இலங்கையர்

**(ந.லோகதயாளன்)**

இந்தியாவில் இருந்து படகு மூலம் இலங்கைக்குள் ஊடுருவ முயன்ற வேளை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு காரைநகர் இடைத்தங்கல் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நால்வரும் இலங்கையர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்., அல்லைப்பிட்டிக் கடற்பரப்புக்குள் ஒரு படகில் ஊடுருவிய நால்வரைக் கடற்படையினர் கைதுசெய்து காரைநகர் இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைத்துள்ளனர். இவர்களில் ஒருவர் மட்டும் அல்லைப்பிட்டியைச் சேர்ந்தவர் எனவும், ஏனைய மூவரும் இந்தியர்கள் எனவும் முன்னர் தெரிவிக்கப்பட்டபோதும் அனைவருமே இலங்கையர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியா வழியாக கனடாவுக்குச் செல்ல முயற்சித்து முடியாமல்போனமையினால் மீண்டும் இலங்கை திரும்பிய இருவரும், இலங்கையில் ☞2

## ரிஷாத்துக்கு எதிராக 'மொட்டு' போர்க்கொடி



ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த சிறுமி மர்மமான முறையில் உயிரிழந்ததைத் தொடர்ந்து ரிஷாத்துக்கு எதிராக ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து ரிஷாத் பதியுதீனை வெளியேற்றுவதற்கு கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ளார். ☞2

## இலங்கையில் 11 வயது சிறுவனுக்கும் டெல்டா!

இலங்கையில் 11 வயது சிறுவனும் கொரோனா வைரஸின் திரிவான டெல்டா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பேருவளை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 11 வயது சிறுவனுக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர்.ஜே.சிங்கபாஹு தெரிவித்தார்.

பேருவளை ஹிரிக்கொடெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி சிறுவன் காலி பிரதேசத்திலுள்ள அரசவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறினார்.

## கெஸ்பாவை ஆடைத்தொழிற்சாலை 'டெல்டா' தொற்றால் இழுத்து மூடல்!

டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் எழுவர் இனங்காணப்பட்டதையடுத்து கொழும்பு, கெஸ்பாவை ஜபுரளிய, லூல்லவல வீதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலையை 10 தினங்களுக்குத் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கெஸ்பேவ பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி சமந்திகா விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.

குறித்த தொழிற்சாலையில் 7 பேருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, மேலும் 121 ஊழியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்ச்சியாக இனங்காணப்பட்டு வந்ததையடுத்து தொழிற்சாலையில் 166 ஊழியர்கள் எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதையடுத்து தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

## ஐஸ், ஹெரோயினுடன் 8 பேர் வசமாக மாட்டினர்

நாடளாவிய ரீதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

25 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்களே இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது 8 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

## ஐஸ், ஹெரோயினுடன் ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 210 கிராம் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பிட்டிகல, கல்கிஸை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 41, 54 வயதுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொஹூவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போதியாவத்த பிரதேசத்தில் 15 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். போதியாவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ், ஸ்டேஸ்புர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 5 கிராம் 320 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஒருகொடவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் 75ஆம் தோட்டம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 5 கிராம் 60 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளர். கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதர்நானா தோட்டத்தில் 4 கிராம் 600 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெடிகந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 4 கிராம் 550 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட் கல்தெமுல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 280 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கல்தெமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார் - என்றார்.

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் 1997 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொண்டு தகவல் தருமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவுறுத்தினார்.

## ரிஷாத்துக்கு எதிராக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு செய்துவிட்டு, நீதிக்காக குரல் கொடுப்பதே பொருத்தமான செயற்பாடாக அமையும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்படும் என்றும், குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

## அல்லைப்பிட்டிக் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து படகில் சென்று அவர்களை ஏற்றி வந்த இருவரும் என நால்வர் கைதுசெய்யப்பட்டு இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## உள்ளூராட்சி சபைத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைசியாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2018ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதன்படி உள்ளூராட்சி சபைத் தேர்தல் அடுத்த ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதிக்கு முன்பு நடத்தப்பட வேண்டும்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் சட்டத்தின் விதிகளின்படி, உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து சுமார் ஆறு மாதங்களுக்குள் தேர்தலை நடத்துவதற்கு அதிகாரம் உள்ளது.

அதன்படி, குறித்த திகதியிலிருந்து தேவைப்பட்டால் மேலும் 16 நாள்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வாய்ப்பு உள்ளது எனத் தேர்தல் ஆணைக் குழு கூறியுள்ளது.

எனினும், கொரோனா வைரஸ் தொற்று நிலைமை காரணமாக மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு வருடத்துக்கும் மேலாக மட்டுமே உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க, விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெலிக்கடைப் ..........







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களது திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, விளக்கேற்றி அஞ்சலி செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஶ்ரீகாந்தா, தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளர் கனகேந்திராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆர்.இராஜமகேந்திரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இவர், கடந்த மூன்று நாள்களாக கோமா நிலைக்குச் சென்றிருந்தார்.

யாழ்., மானிப்பாயைச் சேர்ந்த மகாதேவா - இராஜேந்திரன் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட மகாராஜா நிறுவனத்தை, 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர், இராஜேந்திரத்தின் மகன் இராஜமகேந்திரன் நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொவிட் தடுப்பு விதிகளுக்கு அமைய அவரின் பூதவுடல் இன்று பிற்பகல் தகனம் செய்யப்பட்டது.

## மேலும் 149 பேர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 52 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கைதானவர்களில் 46 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேலும் 6 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிராக எதிர்வரும் வாரங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அதேபோன்று மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 7 ஆயிரத்து 644 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் பயணித்த 4 ஆயிரத்து 120 வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் பயணக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிப் பயணித்த 153 பேர் அவர்கள் பயணித்த 99 வாகனங்களில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். பயணக் கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றி நடக்குமாறு பொதுமக்களை நாம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ராஜபக்ஷக்களின் செல்நெறி

இந்த நாட்டில் ஓரளவுக்கேனும் நடுநிலையான அரசியல்வாதி என்று கருதப்படக்கூடிய முன்னாள் நிதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார்.

“இந்நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், கத்தோலிக்கர்கள் உள்ளிட்ட அனைத்து இனங்களையும் ‘இலங்கையர்கள்’ என்ற அடையாளத்தின் கீழ் ஒன்றிணைத்துக் கொண்டு பயணிக்கக் கூடிய அருமையான வாய்ப்பு ஒன்று போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்ட காலத்தை ஒட்டி உருவானது. இருப்பினும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனைச் செய்யாமல், போர் வெற்றியை சிங்கள இனத்துக்கு மாத்திரம் கட்டுப்படுத்தினார். 1956ஆம் ஆண்டில் காணப்பட்ட இன மற்றும் மதவாத சிந்தனை மேலும் வலுப்பட்டது. அதன் காரணமாக முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நாட்டின் பொருளாதாரம் பின்னடைவைச் சந்திக்க வேண்டியதாயிற்று.”

– இவ்வாறு இணையவழிக் கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத் தெரிவித்திருக்கின்றார் மங்கள சமரவீர.

உண்மைதான். 2009 மே மூன்றாம் வாரத்தில் இலங்கையில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்பட்ட சமயத்தில் போர் வெற்றியைக் கொண்டாடிய நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முக்கிய சந்தி ஒன்றில் நின்றார். அவருக்கு முன்னால் எதிர்காலத்தில் அவர் அரசியலில் பயணிப்பதற்கு இரண்டு பாதைகள் விரிந்து கிடந்தன.

ஒன்று – உலகம் போற்றும் உன்னத தலைவர் நெல்சன் மண்டேலா சென்ற பாதை. அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்து, அதுவரை நிறத்தாலும், இனத்தாலும், பிற காரணங்களாலும் பிளவுண்டு கிடந்த தென்னாபிரிக்காவை புதிய ஐக்கிய தேசமாக கட்டியெழுப்பிய அவரின் பாதை. உலகம் போற்றும் உத்தம தலைவருக்குரிய வழிகாட்டல் செல்நெறி.

மற்றது – சிங்களவர்களின் தேசிய இலக்கியமான மகாவம்சம் போற்றுகின்ற துட்டகைமுனு மன்னனின் பாதை. இன்றைய சிங்கள தேசியவாதிகளின் ஒப்பற்ற தலைவன் அவன். ‘பௌத்த மதத்தை மீட்பதற்காக புனிதப் போரை நடத்தியவன்’ என்று சிங்களவர்கள் அர்த்தம் கற்பிக்கும் சிங்கள தேசிய தலைவன். அவன் காட்டிய பேரினவாதப் பாதை. அதுவும் திரும்பி வர முடியாத ஒருவழிப் பாதை.

நெல்சன் மண்டேலாவின் முதலாவது பாதையைத் தேர்ந்தெடுத்தால் உலகம் போற்றும் உத்தம தலைவனாக வரமுடியும்.

துட்டகைமுனுவின் வழிகாட்டல் படியான இரண்டாவது பாதையை – பேரினவாத செல்நெறியைத் தேர்ந்தெடுத்தால் – இலங்கையின் சிங்கள தேசியவாதம் மட்டும் காலங்காலமாக தலையில் வைத்துப் போற்றும்.

இத்தகைய ஒரு நிலையில்தான் 2009 மே பிற்பகுதியில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்பட்ட சமயத்தில் நாட்டின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷ இருந்தார்.

துரதிஷ்டவசமாக அவரின் மனதில் ஊறியிருந்த பௌத்த, சிங்களப் பேரினவாத மமதையும், அவரைச் சூழவிருந்த பேரினவாத மேலாண்மை போக்கு கொண்ட தரப்புக்களும் இரண்டாவது பாதையில் – துட்டகைமுனுவின் செல்நெறியில் – பயணிக்க அவரைத் தூண்டின.

இந்த இரண்டாவது பாதை தென்னிலங்கையில் தமக்கும் தமது சந்ததியினருக்கும் நிரந்தர சரணாலயமாக இருக்கும் என அவர் நம்பினார். இலங்கையின் பிற பகுதிகளில் இருந்தும், சர்வதேச தரப்புக்கள் இடமிருந்தும் வரக்கூடிய எதிர்ப்பை சிங்கள தேசிய தலைவர் என்ற எழுச்சியை வைத்துக்கொண்டு நிரந்தரமாக பந்தாட முடியும் என்றும் அவர் கருதினார்.

துட்டகைமுனு போன்ற பௌத்த, சிங்கள தேசியவாதியாகத் தாம் முன்னிறுத்தப்பட்டால் தாம் மட்டுமல்லாது, தமது சந்ததியே இந்த மண்ணில் நிரந்தரமாகக் கோலோச்சுவதை யாரும் தடுக்க முடியாது என்றும் அவர் கனவு கண்டார்.

இறுதி யுத்தத்தின்போது வெற்றியை ஈட்டுவதற்காக தமது வழிகாட்டலுடனும் இசைவுடனும் முன்னெடுக்கப்பட்ட யுத்த நடவடிக்கைகள் சர்வதேசக் கவனிப்புக்கும் ஊன்றிய பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டு இருந்தமையை அவர் நன்கு அறிந்திருந்தார். அச்சமயத்தில் தனது படைகள் இழைத்த யுத்தக்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை எல்லாவற்றிற்கும் தாமும் முழுப் பொறுப்பு என்ற சிக்கல் நிலையைக் கவனத்தில் கொண்ட அவர், அந்தக் குற்றங்கள் விசாரிக்கப்படாமல் மூடிமறைக்கப்படுவதற்கு துட்டகைமுனுவின் சிங்கள தேசிய எழுச்சி பாதை தமக்கு உதவும் – பாதுகாப்பாக இருக்கும் – என்று எண்ணினார்.

ராஜபக்ஷ குழுமத்தின் – குடும்பத்தின் – ஆட்சி நிர்வாகம் இன்று இத்தகைய நிலையில் – திசையில் – பயணிப்பதற்கு இந்தச் சிந்தனைப் போக்குத்தான் முழுக்காரணம்.

இலங்கை அரசின் ஓர் இனம் சார்ந்த இத்தகைய பேரினவாத வெறி போக்குக்கு எதிராக சர்வதேச ரீதியில் கிளர்ந்து வரும் எழுச்சிகள், கிளர்ச்சிகள் ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு நிரந்தரமாக ஆப்பு வைக்கப் போகின்றன என்பதுதான் ராஜபக்ஷக்கள் எதிர்பார்க்காத திருப்புமுனையாக அமையப் போகின்றது.

# தமிழ் மக்களின் ஒற்றுமையின்மையை அரசாங்கம் பயன்படுத்தி கொள்கிறது!



### சிறிதரன் வருத்தம்

தமிழ் மக்களின் ஒற்றுமையின்மையை பயன்படுத்தி, தமிழர் பகுதிகளில் பெரும்பான்மையினருக்கு உயர் நியமனங்களை அரசாங்கம் வழங்குகின்றதென நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபைக்கான பொதுச் செயலாளராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த சிங்கள மொழி பேசும் ஒருவரை இந்த அரசாங்கம் நியமித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஒரு மாகாணத்தில் எந்த மொழி முதன்மை செலுத்துகின்றதோ அந்த மொழியின் அடிப்படையில்தான் நியமனங்கள் இருக்கவேண்டுமென சட்ட ஏற்பாடுகள் இருக்கின்ற நிலையில் அரசாங்கம் புதிய செயலாளரை மிகவும் வேகமாக நியமித்துள்ளதாக எஸ்.சிறிதரன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வடக்கு பொதுச் செயலாளராக 12 இற்கும் மேற்பட்டவர்கள் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். ஆனாலும் தகுதி குறைந்த ஒருவரை அரசாங்கம் நியமனம் செய்துள்ளமையை தாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என அவர் கூறியுள்ளார்.

எனவே இந்த விடயத்துக்கு எதிராக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயம் முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச நிறுவனங்களில் புதிதாக எவரையும் இணைக்க வேண்டாம்

### நிதி அமைச்சர் கட்டளை

அரச நிறுவனங்களின் செலவுகளை எதிர்வரும் ஆறு மாத காலத்துக்கு இயலுமான அளவு கட்டுப்படுத்துமாறும், அரச நிறுவனங்களுக்கு சேவையாளர்களை புதிதாக இணைத்துக் கொள்ள வேண்டாம் எனவும் நிதியமைச்சர் அனைத்து அரச நிறுவன பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.



இதற்கமைய அரச நிறுவனங்களின் மேலதிக செலவுகளை எதிர்வரும் 6 மாத காலத்திற்கு இயலுமான அளவு குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக அரச வருமானம் பாரிய அளவு குறைவடைந்துள்ள காரணத்தால் இந்தத் தீர்மானம் நிதியமைச்சரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களுக்கு புதிதாக சேவையாளர்களை இணைத்துக் கொள்வதைத் தற்காலிகமாக இடை நிறுத்துமாறு நிதியமைச்சர் அரச நிறுவன பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மாகாண ஆளுநர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச நிறுவன பிரதானிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது நிதியமைச்சர் அரச செலவினம் தொடர்பில் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேசிய தொழிற்துறை மற்றும் தேசிய உற்பத்திகளின் மேம்பாடு குறித்து அரச நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். வீழ்ச்சியடைந்துள்ள தேசிய தொழிற்துறையை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

முதலீட்டாளர்கள் மற்றும் கடன் மதிப்பீட்டு நிறுவனங்களின் வணிக சமூகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயற்படுத்துமாறு நிதி மூலதனச்சந்தை மற்றும் நிதியமைச்சுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கும் நிதியமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

# பல்கலை விண்ணப்பம் கால எல்லை நீடிப்பு

2020 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு இணையவழியூடாக விண்ணப்பிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

2020 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லையை நாளை திங்கட்கிழமை முதல் நீடிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

போக்குவரத்து கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு மாணவர்கள் சிக்கலை எதிர்கொண்டிருந்தமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை கடந்த 18 ஆம் திகதியுடன் நிறைவடைந்திருந்தது. எனினும் அதற்கான கால எல்லையை நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையபக்கத்திற்குள் பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பித்த பின்னர் குறித்த விண்ணப்ப படிவத்தின் பிரதியொன்றைப் பெற்று அதில் கையெழுத்திட்டு அதனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் குறித்த காலப்பகுதியில் மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடத்துறைகளை மாற்ற வேண்டிய தேவை ஏற்படுமாயின், அதற்காக மேலும் இரு வாரங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக இம்மாதம் 30 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படும். குறிப்பாக ஏற்கனவே விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கு இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

நாளைம முதல் அடுத்த 5 நாள்களில் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு மாத்திரமே அதற்கான வாய்ப்பளிக்கப்படும். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மராட்டியத்தில் நிலச்சரிவு அனர்த்தம் இறந்தோரது 52 உடல்கள் மீட்கப்பட்டன



மராட்டியத்தில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. இதனைத் தொடர்ந்து நகரின் பல்வேறு பகுதிகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதனால், வீடுகள், பயிர்கள் வெள்ள நீரால் சூழப்பட்டு உள்ளன. நிலச்சரிவுகளும் ஏற்பட்டு உள்ளன.

இந்நிலையில், தேசிய பேரிடர் பொறுப்பு படை சார்பில் வெளியான அறிக்கையில், நிலச்சரிவு பகுதிகளில் இருந்து உயிரிழந்த 52 உடல்களை மீட்டு உள்ளோம். அந்த பகுதியில் சிக்கி தவித்த 1,800 மக்களை மீட்டுள்ளோம்.

கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி கொண்ட 87 பேரை மீட்டு பாதுகாப்பு மிக்க பகுதிக்கு கொண்டு சென்று சேர்த்துள்ளோம். காணாமல் போனவர்களை தொடர்ந்து தேடும் பணி துரிதப்படுத்தப்பட்டு உள்ளது என மீட்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று மராட்டியத்தின் ராய்காட், ரத்னகிரி மற்றும் சத்தாரா மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரண பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என தெரிவிக்கப்படுள்ளது.

### நிந்தனைப் பேச்சு விவகாரம்

## பாதிரியார் ஜார்ஜ் பொன்னையாவுக்கு 15 நாள்கள் நீதிமன்றக் காவல்




மதரீதியான சர்ச்சை பேச்சு விவகாரத்தில் கைதுசெய்யப்பட்ட பாதிரியார் ஜார்ஜ் பொன்னையாவுக்கு 15 நாள்கள் நீதிமன்றக் காவல் விதிக்கப்பட்டுள்ளது.

குமரி அருகே அருமனையில் 18 ஆம் திகதி நடந்த கிறிஸ்தவ அமைப்புகள் ஆர்ப்பாட்டத்தில், பாரத மாதா மற்றும் இந்து மத கடவுள்களை விமர்சித்த குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா கைது செய்யப்பட்டார். பிரதமர், அமித் ஷா உள்ளிட்ட தலைவர் களையும் விமர்சித்த வீடியோ வைரலான நிலையில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு இவர் தேடப்பட்டு வந்தார்.

இந்த நிலையில் மதுரை அருகே கள்ளிக்குடியில் காவல் துறை அவரை கைது செய்தது. அவரை அருமனையில் உள்ள குழித்துறை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இந்துமத நம்பிக்கைகளை இழிவாக பேசினார் என உள்ளிட்ட 7 பிரிவுகளில் தொடரப்பட்டிருந்த வழக்குகளை விசாரித்த நீதிமன்றம், அவரை 15 நாள்கள் நீதிமன்றக்த் காவலில் சிறையில் அடைக்க உத்தரவிட்டிருக்கிறது.

## கார்கில் போர் நினைவுச் சின்னத்தில் இந்திய ஜனாதிபதியால் மரியாதை



இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களில் இன்று முதல் 28 ஆம் திகதி வரை 4 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதற்காக இன்று புறப்பட்டுச் செல்லும் அவர் கார்கில் வெற்றி தினத்தையொட்டி லடாக்கில் உள்ள கார்கில் போர் நினைவுச்சின்னத்தில் நாளை மரியாதை செலுத்துகிறார்.

ஸ்ரீநகரில் உள்ள காஷ்மீர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் 27 ஆம் திகதி பங்கேற்கும் ராம்நாத் கோவிந்த், அதைத்தொடர்ந்து மேலும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார். இந்திய ஜனாதிபதியின் வருகையையொட்டி காஷ்மீர் மற்றும் லடாக்கில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## விஞ்ஞானி நம்பி நாராயணன் கைது விவகாரம் சுப்ரீம் கோர்ட்டில் சி.பி.ஐ. அறிக்கை தாக்கல்




இஸ்ரோ விஞ்ஞானி நம்பி நாராயணன், பணத்துக்காக ராக்கெட் ரகசியங்களை வெளிநாட்டுக்கு விற்றார் என 1994 இல் கைது செய்யப்பட்டார். பின்னர் குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்ட நம்பி நாராயணன், தன்னை கைது செய்த கேரள பொலிஸ் அதிகாரிகள் மூவர் மீது சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்.

அதில், தவறிழைத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சுப்ரீம் கோர்ட் ஓய்வுபெற்ற நீதிபதி டி.கே.ஜெயின் தலைமையில் விசாரணை கமிட்டி அமைப்பதாக சுப்ரீம் கோர்ட் தெரிவித்தது. நீதிபதி ஜெயின் கமிட்டி அதன் விசாரணை அறிக் கையை சுப்ரீம் கோர்ட்டில் சீலிட்ட உறையில் கடந்த ஏப்ரல் முதல் வாரம் தாக்கல் செய்தது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஏ.எம்.கான்வில்கர் தலைமையிலான அமர்வு முன் கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி விசாரணைக்கு வந்தது.

வாதங்களை பரிசீலித்த நீதிபதிகள், இஸ்ரோ வழக்கில் விஞ்ஞானி நம்பி நாராயணனை கைது செய்த கேரள பொலிஸார் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக 3 மாதங்களில் விசாரித்து அறிக்கை அளிக்க சி.பி.ஐ. இயக்குநருக்கு உத்தரவிட்டனர். அதையடுத்து, சி.பி.ஐ. கடந்த மே 3 ஆம் திகதி வழக்கு பதிவு செய்தது. கேரள பொலிஸார் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பான அறிக்கையை சி.பி.ஐ., சுப்ரீம் கோர்ட்டில் சீலிட்ட உறையில் தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நாளை விசாரணைக்கு வரவுள்ளது.

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் மீது சொத்துக்குவிப்பு வழக்குப் பதிவு



அ.தி.மு.கவை சேர்ந்த முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கர் வருமானத்திற்கு அதிகமாக 55% சொத்து சேர்த்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2016 தேர்தல் வேட்பு மனுவில் ரூபா.2.51 கோடி சொத்து இருந்ததாக தெரிவித்த நிலையில் கடந்த தேர்தலில் சொத்து மதிப்பு ரூபா.8.62 கோடியாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சராக இருந்தபோது வரவு - செலவு கணக்குகளை ஆய்வு செய்ததில் இந்த விடயங்கள் தெரிய வந்தன என லஞ்ச ஒழிப்புத்துறை முதல் தக வல் அறிக்கையில் பதிவு செய்துள்ளனர்.

இதனடிப்படையில், முன்னாள் அமைச்சர் எம் .ஆர்.விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி விஜயலட்சுமி சகோதரர் சேகர் ஆகியோர் மீது சொத்துக் குவிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக லஞ்ச ஒழிப்புத் துறை தெரிவித்துள்ளது.

# ஆப்கானிஸ்தான் அதிபருடன் பைடன் தொலைபேசியில் பேச்சு



ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தலிபான் தீவிரவாதிகளுக்கும் அந்நாட்டு அரசுக்கும் உள்நாட்டுப் போர் நடக்கிறது.

இதில் ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்கு அமெரிக்கப் படைகள் பக்கபலமாக இருந்து வந்த நிலையில், தலிபான்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு இணங்க அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறி வருகின்றன. ஓகஸ்டு 31ஆம் திகதிக்குள் அனைத்துப் படையினரும் வெளியேறி விடுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அங்கு தலிபான்களின் கை மீண்டும் ஓங்கியுள்ளது. அரசு படைகளுக்கு எதிரான தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ள தலிபான்கள் நாட்டின் பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றி வருகின்றனர். இதனால் ஆப்கானிஸ்தானில் அசாதாரண சூழ்நிலை நீடிக்கிறது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கனி அமெரிக்க அதிபர் ஜோ பைடனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது தலிபான்களின் தற்போதைய தாக்குதல் சமாதான பேச்சுக்களை ஆதரிப்பதற்கான தங்களின் கூற்றுக்கு முரணானது என இருநாட்டு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

அதையடுத்து, ஆப்கானிஸ்தான் இ ராணுவத்துக்கான அமெரிக்காவின் ஆதரவு தொடரும் என அஷ்ரப் கனியிடம் அதிபர் ஜோ பைடன் உறுதி அளித்தார்.

இதுதொடர்பாக அதிபர் அஷ்ரப் கனி கூறுகையில், ‘‘அதிபர் ஜோ பைடன் உடனான தொலைபேசி உரையாடலில் இரு நாடுகளுக்கும் இடையிலான வளர்ந்து வரும் தொடர்ச்சியான உறவைப் பற்றி நாங்கள் விவாதித்தோம். ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்கு ஆதரவு தொடரும் என அதிபர் ஜோ பைடன் எனக்கு உறுதியளித்தார். அவர்கள் ஆப்கானிஸ்தானை பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது’’ என தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானில் வான்வழித் தாக்குதல்

## 33 தலிபான்கள் பலி

ஆப்கானிஸ்தானில் இரு பகுதிகளில் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 30 தலிபான்கள் உயிரிழந்துள்ளனர் எனவும், 17 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் அந்நாட்டு பாதுகாப்புத் துறை மந்திரி உறுதிசெய்துள்ளார்.

வடக்கு ஜாவ்சான் பகுதியைச் சேர்ந்த முர்காப் மற்றும் ஹாசன் தப்பின் கிராமத்தில் பதுங்கியிருந்த தீவிரவாதிகளை சுற்றிவளைத்த இராணுவம் வான்வழித் தாக்குலைத் தொடர்ந்தது. இதில் 19 தீவிரவாதிகள் பலியானார்கள். மேலும் 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதில் தலிபான்கள் பயன்படுத்திய ஆறு இருசக்கர வாகனங்கள், இரண்டு பதுங்கு குழிகள், பயங்கர ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களையும் இராணுவத்தினர் கண்டுபிடித்து அழித்தனர்.

இதேபோல், ஹெல்மண்ட் மாகாணத்தில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 14 தீவிரவாதிகள் பலியானார்கள், 2 பேர் காயம் அடைந்தனர்.

# ஆப்கானிஸ்தானில் ஒரு மாதத்துக்கு இரவு நேர ஊரடங்கு அமுல்



ஆப்கானிஸ்தானில் முக்கிய நகரங்களை தலிபான்கள் கைப்பற்றுவதை தடுக்க இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 20 ஆண்டுகளாக ஆப்கானில் முகாமிட்டிருந்த அமெரிக்கப் படைகள் படிப்படியாக விலகத் தொடங்கியதில் இருந்து தலிபான்களின் கை ஓங்கியது.

நாட்டில் பாதி பகுதிகள், தலிபான்கள் வசம் சென்ற போதும் நகரங்கள் அனைத்தும் அரசு படைகள் கட்டுப்பாட்டில் உள்ளன. எஞ்சியுள்ள அமெரிக்கப் படைகள், தலிபான்கள் மீது அவ்வப்போது வான் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் அவர்களும் அடுத்த மாத இறுதிக்குள் தாயகம் திரும்புகின்றனர்.

இதனால் தலிபான்கள் முன்னேறி வருவதை தடுக்க ஒரு மாதத்துக்கு இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. காபுல், பஞ்ஷீர் மற்றும் நங்கர்ஹர் மாகாணங்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

# மெக்சிக்கோவில் குழந்தைகளுக்கான புற்று நோய் மருந்துக்குத் தட்டுப்பாடு

## பெற்றோர்கள் போரட்டம்




*மெக்சிக்கோவில் அரசு பொது மருத்துவமனைகளில் ஏற்பட்டுள்ள குழந்தைகளுக்கான புற்றுநோய் மருந்து தட்டுப்பாட்டை எதிர்த்து ஏராளமான பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*மெக்சிக்கோவில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 2 ஆயிரத்து 300 குழந்தைகள் புற்றுநோயின் கோரப் பிடியில் சிக்கி உயிர் இழக்கின்றனர் என கூறப்படுகிறது. இந்நிலையில், தற்போது மருந்து தட்டுபாடு ஏற்பட்டுள்ளதால் பெற்றோர் பேரணியாக வந்து எதிர்ப்பை பதிவு செய்தனர்.*

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

ST.ANTONY'S
COMPUTER


99,000/= முதல்
021 222 4865
075 069 8608
189, K.K.S Road, Jaffna Town.

# உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் கல்முனைப் பகுதிகளுக்கு விஜயம்

கிழக்கு மாகாணத்தில் தற்போது அதிகூடிய கொவிட் தாக்கத்துக்குள்ளாகியிருக்கும் கல்முனைப் பிராந்தியத்திற்கு அவசரமாக சுகாதார அமைச்சின் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் தலைமையிலான சுகாதாரத் துறை உயரதிகாரிகள் குழு விஜயம் செய்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இலங்கை சுகாதாரத்துறை நிர்வாகத்தில் உயர்மட்ட உயரதிகாரி விஜயம் செய்தமை பல ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளுக்கு வழிவகுத்தது.

இதுவரை காலமும் அங்கு தடுப்பூசி கிடைக்கப்பெறவில்லையென பலதரப்பினரும் ஊடகங்களில் குற்றம்சாட்டிவந்த தருணத்தில் இவர்களது விஜயம் அமைந்திருந்தது. அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள் வரை இந்தத் தடுப்பூசி விவகாரத்தில் மூக்கை நுழைத்திருந்தனர். சிலர் தடுப்பூசி வரமுன்பே வந்ததாக நன்றியும் தெரிவித்து ஊடக அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர். மக்களுக்கு அனைத்தும் புரியும்.

தடுப்பூசி விவகாரத்துக்கு அந்த இடத்திலேயே தீர்வும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேலகுணவர்த்தன தலைமையிலான உயர்மட்ட சுகாதார அதிகாரிகள் குழுவினர் கல்முனைக்கு இன்று விஜயம் செய்தனர். கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் குண.சுகுணன் தலைமையில் நீண்டநேரம் கலந்துரையாடல் அவரது பணிமனையில் இடம்பெற்றது.

பிரதி சுகாதாரசேவைப்பணிப்பாளர் நாயகம் வைத்தியர் எல்.பானபிட்டிய, வைத்தியர் சுதத் தர்மரத்ன உள்ளிட்ட குழுவினர் வருகை தந்திருந்தனர். கிழக்கு மாகாண சுகாதாரசேவைப்பணிப்பாளர் வைத்தியர் எ.ஆர்.எம்.தௌபீக் கலந்துரையாடலை நெறிப்படுத்தினார்.

கல்முனைப் பிராந்தியத்துக்கு 50ஆயிரம் சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசிகள் அனுப்பி வைக்கப்படுமென்று சுகாதார அமைச்சின் சுகாதாரசேவைபணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேலகுணவர்த்தன கல்முனை விஜ யத்தின்போது தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார நிலைமை கொவிட் 19 பரம்பல் தடுப்பு முறைகள் பற்றி விலாவாரியாகக் கலந்துரையாடப்பட்டது.

இறுதியில் குழுவினர் கல்முனை ஆதார வைத்தியசாலை, கல்முனை அஸ்ரப் ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் ஆதாரவைத்தியசாலைகளுக்கும் விஜயம்செய்து சுகாதார செயற்பாடுகளை அவதானித்தனர். மேற்படி குழுவினர் கல்முனைப் பிராந்திய கொவிட் குழுவினரைப் பாராட்டி விடைபெற்றனர்.

# மற்றொரு குழுவினர் கல்முனைக்கு விஜயம்

(காரை.நிருபர்வி.ரி.சகாதேவராஜா)

சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் லால் பணபிட்டிய தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் குழு கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்தது.

கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்தியஅத்தியட்சகர் வைத்தியர் இரா.முரளீஸ்வரன் விடுத்த வேண்டுகோளின்பேரில்கல்முனைக்கு விஜயம் செய்த பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேலகுணவர்த்தனவின் ஒரு குழுவினர் அங்கு விஜயம்செய்திருந்தனர்.

சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவசேவைகள்) வைத்தியர் லால்பணபிட்டிய மருத்துவ வழங்கல் பிரிவு பணிப்பாளர் வைத்தியர் கபில, ஆய்வுகூட பணிப்பாளர்வைத்தியர் விஜித குணசேகர உள்ளிட்ட உயர்மட்டக்குழுவினர் விஜயம்செய்தனர்.

அவர்கள் வைத்தியசாலையில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் கொவிட் விசேடபிரிவைப் பார்வையிட்டு பூரண திருப்தியடைந்தனர். அங்கு நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுவரும் பாதுகாப்பு பராமரிப்பு சேவைகளை நேரடியாகக் கண்ணுற்று பாராட்டும் தெரிவித்தனர். வைத்தியசாலை கவின்நிலை வழுங்கப்படும் சுகாதாரசேவைகள் குழுவினரை வெகுவாகக் கவர்ந்தது.

இதன்போது வைத்திய நிபுணர்களின் தேவை ஆய்வுகூடவசதிகள், ஒட்சிசன் விநியோகம், தேவையான மருத்துவ உபகரணங்கள் பற்றி பூரண தகவல்களை எழுத்து மூலம் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் முரளீஸ்வரன் குழுவின ரிடம் சமர்ப்பித்தார்.

தேவைகளை முடியுமானவரை பூர்த்தி செய்து தருகிறோம் என குழுவினர் உறுதியளித்தனர்.

நிகழ்வில் வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் சோ.திருமால், தாதியபரிபாலகர் எஸ்.சஜிந்திரன், பிரதமமுகாமைத்துவ உதவியாளர் ரி.தே வஅருள், நிர்வாக உத்தியோக்தர் எஸ்.கிருஷ்ணகுமார், பராமரிப்புப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சுந்தர் உள்ளிட்டோரும் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

இத்துடன் மேலும் 3 வைத்தியசாலைகளும் விஜயம் செய்து சுகாதார பராமரிப்பு செயற்பாடுகளை குறிப்பாக கொவிட் சிகிச்சை முன்னெடுப்புகளை பார்வையிட்டு திருப்தி தெரிவித்துசென்றனர்.

# 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு காத்தான்குடியில் தடுப்பூசி ஏற்றல்



மட்டக்களப்பு, ஜூலை 25

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோபோர்ம் கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எல்.எம். நபீல்தலைமையில்நேற்று முதல் நடைபெற்று வருகின்றன.

இந்தவகையில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலுள்ள முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு காத் தான் குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை யில் கொவிட் -19 தடுப்பூசிகள் சனிக்கிழமை ஏற்றப்பட்டுள்ளன. கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எம்.எம்.பசீர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், காத்தான்குடி பிரதேச செயலகம், காத்தான் குடி நகர சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் பிரிவினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தல்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைஎல்லைக்குட்பட்ட 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கொரோனாத் தடுப்பூசி வழுங்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட பொது இடங்களில் தடுப்பூசி ஏற்றும் மையங்கள் அமைக்கப்பட்டுசெயற்படுத்தப்பட்டுவருகின்றன. இந்த நிலையங்களில் மக்கள் ஆர்வத்துடன் தடுப்பூசியினை பெற்று வருகின்றமை விஷேட அம்சமாகும்.

அதற்கமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணி நேற்றுக் காலை 8 மணியிலிருந்து இடம்பெற்று வருகின்றது. சம்மாந்துறையில் ஆதார வைத்தியசாலை , அப்துல் மஜீட் மண்டபம், அல் மர்ஜான் பாடசாலை போன்ற மூன்று இடங்களில்அரச அதிகாரிகள், மக்களுடன் நேரடி தொடர்பை கொண்டிருப் போர், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பிராந்திய ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள்,60 வயதுக்கு மேற்பட்டோர், கர்ப்பிணி தாய்மார், என பலருக்கும் தடுப்பூசி ஏற்றும் பணி சிறப்பாக சம்மாந்துறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஐ.எம் கபீர் தலைமையில் சுகாதார உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் பங்களிப்புடன் இடம்பெற்று வருகின்றது.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம் தௌபீக் சம்மாந்துறையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் இடங்களுக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கால்வாயில் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

பெற்றோர்களுடன் சுற்றுலா சென்ற சிறுவன் கால்வாயில் தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் பொத்தானையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரகுமானியா வீதி பாலை நகர் தியாவட்டவானைச் சேர்ந்த றிபாஸ் முகமட் ஆசிக் வயது (12) என்ற 7ஆம் ஆண்டில் கல்வி பயிலும்மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமையன்று பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பொத்தானை வயல் பிரதேசத்திற்கு சுற்றுலாச் சென்றுள்ளனர்.

மதிய உணவினை உட்கொள்வதற்காக சிறுவனை தேடியபோது அருகில் உள்ள நீர் வடிந்தோடும் கால்வாயில் விழுந்து கிடந்ததை கண்டு அவரை மீட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். பின் சிகிச்சை பலனின்றி சிறுவன் உயிரிழந்துள்ளார். மரணவிசாரணைகளைகோறளைப்பற்று பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வ. ரமேஸ் ஆனந்தன் மேற்கொண்டிருந்தார்.

நீரில்மூழ்கியதால்மூச்சுத்திணறிஉயிரிழந்துள்ளார் எனவும் , உடற் கூற்றாய்வின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறும் மரணவிசாரணை அதிகாரி பொலிஸாரை பணித்திருந்தார்.

# கிழக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் காரைதீவில் பொலிஸ் நிலையம் திறந்து வைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சௌபாக்கியத்தின் நோக்கு' திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்கான பொலிஸ் நிலையம் கடற்கரை வீதியில் வெள்ளியன்று கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கமல் சில்வாவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் புதிய பொலிஸ் நிலையம் காரைதீவு மாளிகைக்காடு சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களை நிர்வகிக்கக்கூடியவாறு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் காரைதீவு, நிந்தவூர் ஆகிய பெரும் பிரதேசங்கள் சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவில் உள்ளடங்கியிருந்தன. விரைவில் நிந்தவூர் பிரதேசத்துக்கும் தனி யான பொலிஸ்நிலையம் அமைய விருப்பதாகக் கூறப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட மற்றும் பிராந்திய பொலிஸ் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பிரதம பொலிஸ் பரிசோதகர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், ஆலய பரிபாலன சபையினர், மதகுருமார்கள், கிராம சேவகர்கள், ஊர் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்து பௌத்த இஸ்லாமிய மதகுருமார்களின் ஆசியுடன் இந்த பொலிஸ் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.





இந்நிகழ்வின் நினைவாக அதிதிகளால் மரக்கன்றுகள் நடப்பட்டன. கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா பொலிஸ்நிலைய குறிப்பேட்டிலும் கையெழுத்திட்டார்.

# இங்கிலாந்தில் காயமடைந்த இந்திய வீரர்களுக்கு மாற்று இலங்கைத் தொடரில் விளையாடும் சிலருக்கு வாய்ப்பு



இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதற்காக கடந்த ஜூன் மாதமே கோலி தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்து சென்றிருந்தது.

இந்த நிலையில் அணியில் இடம் பெற்றிருந்த சுப்மன் கில், ஆவேஷ் கான் மற்றும் வாஷிங்டன் சுந்தர் ஆகிய வீரர்களுக்கு பயிற்சி ஆட்டத்தில் காயம் ஏற்பட்டது. அதனால் அவர்களுக்கு மாற்றாக பிருத்வி ஷா, சூர்ய குமார் யாதவ் மற்றும் ஜெயந்த் யாதவ் ஆகியோர் விரைவில் இங்கிலாந்துக்குப் பறக்கவுள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது. இதனை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

தற்போது இலங்கைக்கு எதிரான தொடரில் விளையாடிவரும் இந்திய அணியில் பிருத்வி ஷா மற்றும் சூர்யகுமார் யாதவ் இருவரும் இணைக்கப்பட்டுள்ளனர். இலங்கை அணிக்கெதிரான ரி-20 தொடர் முடிந்த பிறகு அவர்கள் இலங்கையில் இருந்து நேரடியாக இங்கிலாந்து பயணிப்பார்கள் எனத் தெரிகிறது. டெஸ்ட் அணியில் விளையாடும் வாய்ப்பை சூரியகுமார் யாதவ் முதல் முறையாகப் பெற்றுள்ளார்.

## உலகின் முதல் நிலை டென்னிஸ் வீராங்கனை ஆஷ்லே பார்ட்டி ஒலிம்பிக்கில் அதிர்ச்சித் தோல்வி



ஒலிம்பிக் போட்டித்தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு டென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இன்று காலை நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சமீபத்தில் நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டி, ஸ்பெயின் நாட்டின் சாரா சொர்ரிபெஸ் டோர்மே ஷாவை எதிர்கொண்டார்.

ஆஷ்லே பார்ட்டி எளிதாக வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் 4-6, 6-3 என நேர் செட்களில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார்.

## பங்களாதேஷ் அணியுடனான ரி–20 தொடர் இரண்டாவது போட்டியில் சிம்பாப்வே வெற்றி



பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது ரி -20 போட்டியில் சிம்பாப்வே அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 1-1 என்ற கணக்கில் சிம்பாப்வே அணி சமநிலைப்படுத்தியுள்ளது.

ஹராரே மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. வெஸ்லி மதேவரே 73 ஓட்டங்களையும் ரியான் பேர்ல் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பங்களாதேஷ் அணியின் சொரிபுல் இஸ்லாம் 3 விக்கெட்டுகளையும் மெயிடி ஹசன் மற்றும் சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 167 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 19.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. மீம் ஹொசைன் 29 ஓட்டங்களையும் ஹபீப் ஹொசைன் 24 ஓட்டங்களையும் எடுத்தனர். சிம்பாப்வே அணியின் பந்துவீச்சில், லுக் ஜோங்வே மற்றும் வெலிங்டன் மசகட்சா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் டென்டாய் சட்டாரா மற்றும் பிளெஸிங் முஸரபானி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக வெஸ்லி மதேவரே தெரிவுசெய்யப்பட்டார்.

ஒலிம்பிக் டென்னிஸ்

## முதல் சுற்றில் டெலிலியனை வீழ்த்தினார் ஜோகோவிச்



கோல்டன் ஸ்லாம் கனவுடன் டோக்கியோ ஒலிம்பிக்கில்பங்கேற்றுள்ள முன்னணி டென்னிஸ் வீரர் நோவாக் ஜோகோவிச் முதல் சுற்றில் வெற்றி பெற்றிருக்கிறார். பொலிவியாவின் ஹூகோ டெலிலியனை 6- 2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் அவர் வீழ்த்தினார். ஆஸ்திரேலிய ஓபின், பிரெஞ்சு ஓபின், விம்பிள்டன் தொடர்களை வென்றுள்ள ஜோகோவிச், தனது அடுத்த சுற்றில் ஜேர்மனியின் ஜேன் லெனார்ட் ஸ்டரூபை எதிர் கொள்கிறார்.

ஒலிம்பிக்கில் தங்கம் வென்று, அடுத்து வரும் அமெரிக்க ஓபின் போட்டியிலும் ஜோகோவிச் வென்றால், கோல்டன் ஸ்லாம் பட்டத்தை வென்ற முதல் டென்னிஸ் வீரர் என்ற கௌரவத்தைப் பெறுவார்.


வேலைவாய்ப்பு

சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு - 076 740 3814

INDIVIDUAL ENGLISG CLASSES

K. GANESH (BA. Pera)

Grade 7 தொடக்கம் International Schools, பட்டதாரிகள் பட்டதாரி மாணவர்கள் (English Medium உட்பட) தொழில்புரிவோர் , O/L A/L எடுத்தவர்கள் சரளமாக பேசுதற்கு



# தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளுக்கு பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை தேவை



## கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் மற்றும் ஜூலை கலவரம் உள்ளிட்ட இனப்படுகொலைகள் ஆகிய வற்றுக்கு சர்வதேசத்தால் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், ஜூலை படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவு நாளன்று, வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஆர்ப் பாட்டங்களும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிலையில் கல்முனையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே செல்வராஜா கஜேந்திரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது வெளிப்படுத்தப்படல் வேண்டும் மற்றும் தமிழ்த் தேசமும் இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என மக்களும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் தமிழர்களது காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படல் வேண்டும், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமிறக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாளொன்றில் அதிக தடுப்பூசிகள் நேற்று சனி ஏற்றப்பட்டுள்ளன

இலங்கையில் நாளொன்றில் அதிக எண்ணிக்கையிலான கொரோனாத் தடுப்பூசிகள் நேற்றைய தினம் செலுத்தப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் மாத்திரம் 4 லட்சத்து 12 ஆயிரத்து 111 கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதன்போது, 3 லட்சத்து 66 ஆயிரத்து 622 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாம் டோஸ் செலுத்தப்பட்டது.

மேலும் 35 ஆயிரத்து 720 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டது.

அதேநேரம், ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்றையதினம் 39 பேருக்கு செலுத்தப்பட்டது. மேலும் மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸ் நேற்றையதினம் 69 ஆயிரத்து 830 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

# சிறுவர் துஷ்பிரயோகத்தை எதிர்ப்பது ஒரு சமூகத்தின் பாரிய பொறுப்பாகும்

## சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவிப்பு

சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் துன்புறுத்தல் மற்றும் சிறுவர் அடிமைத்தனம், பெயர் எதுவாக இருந்தாலும் அதை நிபந்தனையின்றி எதிர்ப்பது ஒரு சமூகத்தின் பொறுப்பாகும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

மேலும் சிறுவர்களுக்கு எதிரான இத்தகைய முறைகேடுகளைத் தடுக்கவும், அத்தகைய நபருக்கு எதிராக எதிர்ப்பு தெரிவிப்பதைத் தவிர்த்து சட்டத்தை அமுல்படுத்தவும் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் தேவை உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குற்றவாளிகளுக்கு அவர்களின் சமூக அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் சட்டத்தை விரைவாக அமுல்படுத்த வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் அடிமைத்தனம் தொடர்ந்து சிறுவர்களின் முழு வளர்ச்சி திறனை அடைய முடியாத சூழலை உருவாக்கி வருவதாகவும், நீண்ட கால உடல் மற்றும் மனக் குறைபாடுகளுக்கு ஆளாகக்கூடியதாகவும் அமைச்சர் நினைவுபடுத்தினார்.

துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுவர்கள் பெரியவர்களாக மாறியவுடன் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை மீண்டும் உருவாக்கப்படுவது தவிர்க்க முடியாதது, இதனால் சிறுவர் துஷ்பிரயோகத்தின் தீய சுழற்சியைத் தொடர்கிறது.



சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறை சமுதாயத்தில் மதிப்புகள் மோசமடைவதையும் பாலின சமத்துவமின்மையையும் காட்டுகிறது.

எனவே இதுபோன்ற சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கு பெண்கள் மட்டுமல்ல, அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றமை முக்கியம்.

இறந்த ஹிஷாலினிக்கு நீதியை விரைவாக நிறைவேற்றுவது எதிர்காலத்தில் இதுபோன்ற துன்புறுத்தல்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்க வழிவகுக்கும் என்று அவர் நம்புகிறார் எனவும் கூறினார்.

## அரசை விட்டு வெளியேறுமாறு எவரும் எம்மிடம் கூறவில்லை

### நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்

அரசாங்கத்தை விட்டு வெளியேறுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் எவரும் கூறவில்லை என அக்கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மறைந்த பொதுச் செயலாளர் தர்மசிறி சேனாநாயக்கவின் 21 ஆவது நினைவு தினம் கொழும்பில் உள்ள அவரது நினைவிடத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

தங்களை யாரும் வெளியேறச் சொல்லவில்லை. தலைவர் இன்று இங்கே இல்லை, அவர் அவசர விடயத்துக்காக பொலன்னறுவைக்குச் சென்றுள்ளார் - என நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# கட்டுக்கடங்காத தென்பகுதி மீனவரால் முல்லைத்தீவில் கொரோனா பேராபத்து

முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்த அனுமதியும் இன்றி தெற்கின் புத்தளம் மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு நாயாற்று பகுதியில் அத்துமீறி குடியமர்ந்து கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் மீன்பிடித் தொழிலாளர்களால் வடக்கில் பாரிய கொரோனா ஆபத்தைத் தோற்றுவிக்கும் அபாயம் எழுந்துள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தளத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் வாடி அமைத்து குறுகிய நிலப்பரப்பில் தொழில் செய்து வருகின்றார்கள்.

ஜூலை மாத தொடக்கத்தில் இருந்து இதுவரை அப்பகுதியில் 53 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் முடக்கப்பட்டுள்ள தங்கள் பிரதேசத்தை விடுவிக்கக் கோரி அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளதால் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய அச்சுறுத்தலாக காணப்படும் நாயாற்று மீனவக் குடும்பங்களால் சுகாதாரப் பிரிவினர் சிரமங்களுக்கு முகம் கொடுத்து பணி செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்த பதிவும் இல்லாத மக்களால், சுகாதாரப் பிரிவினருக்கு பணிசெய்வதில் பாரிய சவால்கள் ஏற்பட்டுள்ளன. இவர்கள் தொடர்பிலான கண்காணிப்போ அல்லது பதிவு நடவடிக்கையோ எவரிடமும் இல்லை.

நாயாற்று பகுதியில் புத்தளத்தினைச் சேர்ந்தவர்கள் வாழும் பகுதிக்கு அருகில் தான் நாயாறு கடற்படை தளம் அமைந்துள்ளது அண்மைய பகுதியில் இராணுவ முகாம்கள் காணப்பட்டாலும் அந்த மக்கள் சிங்கள மொழியை சரளமாக பேசக்கூடியவர்கள் என்பதன் காரணத்தால் பாதுகாப்புத் தரப்பினருடன் பேசியே தங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். அவர்களும் இசைவாகவே செயற்பட்டு வருவதை இங்கு தமிழ்மக்கள் மத்தியில் அவர்கள் நடந்துகொள்ளும் செயற்பாட்டை வைத்து காணக்கூடியதாக இருக்கின்றது.

இது ஒரு கொரோனா வலயத்தினை தோற்றுவிக்கும் செயற்பாடாகவே புத்தளம் மக்களின் நடவடிக்கை அமைந்துள்ளது.

எத்தனை பேர் இவ்வாறு இங்கு வாழ்கின்றார்கள் என்று யாரிடமும் தெரியாத நிலையில் அரசாங்கத்தின் பண உதவியினை பெற்றுக்கொள்வதற்காக 198 பேர் பதிவு செய்துள்ளார்கள்.

நிவாரணம் கொடுக்கவுள்ளதாக பிரதேசசெயலகத்தால் பதிவை முன்னெடுத்த போது 845 பேர் பதிவை மேற்கொண்டுள்ளார்கள்.

அவ்வாறு பதிவை மேற்கொண்டவர்கள் அனைவருக்கும் அன்டிஜன், பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் பரிந்துரை செய்த போது இல்லை 400 பேர் வரையில்தான் என்று புத்தளம் மீனவர்கள் சொல்கின்றார்கள்.

இவ்வாறு எந்த கணக்கும் பதிவும் அற்ற நிலையில் வாழ்ந்துவரும் புத்தளம் மீன்பிடியாளர்களால் அரச சுகாதார உத்தியோகத்தர்கள் தங்கள் கடமையை முழுமையாக செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

முடக்கப்பட்ட பகுதியான இந்த பகுதியில் இருந்து 379 பேர்வரைக்கும் பி.சி.ஆர். செய்யப்பட்டதில் இன்றுவரை 53 கொரோனாத் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் முடக்கப்பட்ட ஒரு பகுதியில் உள்ள அனைவருக்கும் பி.சி.ஆர். செய்வதற்காக சுகாதாரப் பிரிவினர் சென்ற போது முடக்கப்பட்ட பகுதியில் இருந்த புத்தளவாசிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

நாட்டில் எத்தனையோ மக்கள் தங்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வேண்டும் என வேண்டி நிற்கும் இந்த வேளையில் இந்த மக்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஒத்துழைக்காமை கவலையளிக்கின்றது.

கடற்தொழில் அமைச்சு, நீரியல்வளத் திணைக்களத்தின் எந்த அனுமதியும் இல்லாத நிலையில் இவர்களின் கடற்தொழில் நடவடிக்கையையும் இவர்களின் தொழில் நடவடிக்கையையும் யார் கண்காணிப்பார்கள்? இவ்வாறானவர்களின் செயற்பாட்டால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பாரிய ஆபத்து எதிர்காலத்தில் உள்ளது. அரச பாதுகாப்பு இயந்திரங்கள் இதனைக் கருத்தில்கொண்டு சட்டம் அனைவருக்கும் சமம் என்பதை இங்கு நிறைவேற்ற வேண்டும் என்பது முல்லைத்தீவு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2021இல் வெளியிடப்பெற்றது.